செல்லப்பட்டிருக்கிறார். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட தங்கமணி சிகிச்சை பலனின்றி இரவு சுமார் 8–40 மணியளவில் உயிரிழந்துள்ளார். தங்கமணியின் உடல் அதே மருத்துவமனையில் வைக்கப்பட்டிருந்தது.

நேற்றிரவு நீதித் துறையினுடைய நடுவர் முன்னிலையில் உடற்கூறாய்வு நடைபெற்றுள்ளது. அதன் அறிக்கை கிடைக்கப்பெற்றவுடன், உரிய விசாரணை நடத்தப்பட்டு, இந்த அவைக்குத் தெரிவிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(ஆ) மண்பாண்டத் தொழிலாளர்கள், செங்கல் சூளை நடத்துபவர்கள் மண் எடுப்பதில் பிரச்சினை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது, (குறுக்கீடு) இல்லை, அதை இன்னொரு நாள் எடுத்துக்கொள்கிறேன். இல்லை. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) அதை நான் அவையில் வைத்தே சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) இல்லை, அவையில் வைத்தே சொல்லிவிட்டேன். இதுசம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர் திரு.தளவாய் சுந்தரம் அவர்களும் என்னிடம் சொல்லியிருக்கிறார்கள். நீங்கள் உட்காருங்கள். அடுத்த வாரம் எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

திரு. பால் மனோஜ் பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்பாண்டத் தொழிலாளர்கள், . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுக்குத் தெளிவான பதில் சொல்கிறேன் என்று சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) நீங்கள் பேசுவது அவைக் குறிப்பில் ஏறாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். அதைத்தான் எடுக்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்பாண்டத் தொழிலாளர்கள், செங்கல் சூளைத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கும் மண் தேவை என்பதை உணர்ந்து தேர்தல் காலத்திலேயே எங்கள் தலைவர் அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன் அளிப்போம் என்று சொன்னார்கள். நீங்கள் அந்தச் சட்டப் பிரிவு 44–ல் ஒரு amendment போட்டுவிட்டு,

[திரு. துரைமுருகன்] [2022 ஏப்ரல் 29

அதை Gazette–ல் போடாமல் தேர்தல் காலமானதால் அப்போது போய்விட்டீர்கள். இப்போது நாங்கள் Gazette–ல் போட்ட பிறகு, மண் எடுப்பதற்கு என்னென்ன செய்ய வேண்டும் என்பதை அவர்களுக்கு அறிவுறுத்தி, அதிகாரிகளுக்கும் தெரிவித்திருக்கிறோம். முன்பெல்லாம் சுற்றுச்சூழல் அனுமதி பெற வேண்டும் என்று இருந்தது; இப்போது சுற்றுச்சூழல் அனுமதி பெறத் தேவையில்லை. முன்பு Agriculture A.D. அவர்களிடம் வாங்கினால் போதும் என்று இருந்தது; இப்போது Agriculture Clerk இடம் வாங்கினால் போதும். மாவட்ட ஆட்சியரிடம் அனுமதி பெற வேண்டும். மண் எடுக்கும் கால அளவு 3 மாதம். யூனிட் ஒன்றுக்கு அறுபது ரூபாய் கட்ட வேண்டும். ஒன்றரை மீட்டர் ஆழத்திற்கு மண் எடுத்தால் போதும் என்று இருந்தது. இப்போது நாங்கள் எல்லாவற்றையும் free செய்திருக்கிறோம்.

முற்பகல் 11–15

இதை நான் Collectors Conference–லும் சொன்னேன். நேற்று பகல் 12 மணிக்கு Mines and Minerals Director–ஐ அழைத்து, எல்லா A.D.–களுக்கும் சொல்லிவிட்டீர்களா; தகவல் கொடுத்துவிட்டீர்களா; Collector உடன் பேசுங்கள்; நீங்களே பேசுங்கள் என்று சொன்னேன். என்ன ஒரு பிரச்சினை என்று கேட்டால், சில இடங்களில் A.D.–க்கள் கொடுத்தால் Collector வாங்குவதில்லை; Collector கொடுத்தால் A.D. வாங்குவதில்லை என்று இருக்கிற காரணத்தால் சில இடங்களில் நடக்கவில்லை. இந்தப் பிரச்சினை எனக்குத் தெரிய வந்திருக்கிறது. நேற்றையதினம் நான் கொடுத்திருக்கின்ற instruction பிரகாரம் இன்னும் இரண்டொரு நாட்களில் சரியாகிவிடும். Leave முடிந்து வந்ததும் நீங்களே thanks சொல்லிவிடுவீர்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு வார்த்தை சொல்லிவிடுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தளவாய் சுந்தரம் அவர்கள் பலமுறை உங்களிடம் கேட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. தளவாய் சுந்தரம் அவர்கள், வனத் துறை பிரச்சினை குறித்து.

திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் Rule 44 பற்றி பேசினார். Rule 44–ல் Sub–section 10–ல் ஒரு condition போட்டிருக்கின்றீர்கள். மலையும் மலை சார்ந்த இடங்களிலும், Eco–sensitive zone–களிலும் மண் எடுக்கக் கூடாது என்று போட்டிருக்கின்றீர்கள்.

2022 ஏப்ரல் 29] *[திரு. ந. தளவாய் சுந்தரம்]*

ஆனால், பாதி இடங்கள் மலையும், மலை சார்ந்த இடங்களாக இருக்கின்றன. அதாவது Hill Area Conservation Authority HACA–*என்று இருக்கிறது. அதில் கொஞ்சம்* relaxation *செய்யலாம். ஏனென்றால் இது வந்து (குறுக்கீடு) ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடு) இருக்கட்டும், ஒரு நிமிடம் நான் பேசிவிடுகிறேன். நான் பேசிவிடுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஓர் உறுப்பினர் பேசினால் அவர் பேசி முடிக்கட்டும். அவர்கள் பிரச்சினையைச் சொல்கிறார்கள், அதற்கு அமைச்சர் பதில் சொல்வார்கள்.*

திரு. ந. தளவாய் சுந்தரம்: *மேற்குத் தொடர்ச்சி மலையில் இருக்கக்கூடிய . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வனத் துறை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர் வேல்முருகனுக்கா எழுதிக் கொடுத்திருக்கின்றது? மாண்புமிகு உறுப்பினர் பேசட்டும், அமைச்சர் பதில் சொல்வார்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. தளவாய் சுந்தரம், பேசுங்கள்.*

திரு. ந. தளவாய் சுந்தரம்: *மேற்குத் தொடர்ச்சி மலையில்* local–*ல் இருக்கக்கூடிய* DFO–*தான் இதையெல்லாம் எடுக்கிறார்கள்.* HACA, *வனத் துறை இரண்டையுமே* local–*ல் இருக்கக்கூடிய* DFO–*தான் அளந்து எடுத்து வருகிறார்கள். முதலில் 10 மீட்டர் என்று இருந்ததை, . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும், போதும்.* HACA *விவகாரம் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிடுவார்கள். முடித்துவிடுங்கள்.*

திரு. ந. தளவாய் சுந்தரம்: *ஒரேயொரு நிமிடம். இது மேற்குத் தொடர்ச்சி மலையில் இருக்கக்கூடிய, கன்னியாகுமரியிலிருந்து ஆரம்பித்து ஆரல்வாய்மொழி, பணகுடி, வள்ளியூர், ராதாபுரம் தொகுதி வரை எல்லா இடங்களிலும் இருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் எல்லா இடங்களிலும் இருக்கிறது.*

திரு. ந. தளவாய் சுந்தரம்: *எல்லா தொகுதிகளிலும் இந்தப் பிரச்சினை இருக்கிறது. ஆகவே, எங்கள் ஆட்சியில் கொண்டு வந்த* Rule *44–ஐ தயவுசெய்து கொஞ்சம்* relax *செய்து மண் எடுப்பதற்கு,*

மண்பாண்டங்களுக்கு மட்டுமல்ல; செங்கலுக்கு மண் எடுப்பதற்கும் தாங்கள் தயவுசெய்து rule–ஐ relax செய்து தரவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: செங்கல், ஓடு, மண்பாண்டம் ஆகியவற்றிற்காக. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: Relax செய்யலாமா, வேண்டாமா (குறுக்கீடு) என்ன? இவர் relax செய்ய வேண்டாம் என்று சொல்கிறார். Relax செய்யக் கூடாதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, மண் எடுப்பது குறித்து. (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் நீங்கள் பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) நீங்கள் கேளுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லட்டும். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் பதில் சொன்னதற்குப் பிறகு பேசுங்கள். மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லட்டும், அதற்குப் பிறகு சொல்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. துரைமுருகன்: HACA வேண்டுமென்று சொல்கிறீர்களா, வேண்டாமென்று சொல்கிறீர்களா? (குறுக்கீடுகள்) HACA இருக்கட்டும் என்று சொல்கிறீர்களா? நான் கேட்கிறேன், மாண்புமிகு உறுப்பினர் தளவாய் சுந்தரம் அவர்கள் சொல்வது relax செய்து கொடுங்கள் என்று கேட்கிறார். நீங்கள் relax செய்ய வேண்டாம் என்று சொல்கிறீர்கள். இதுகுறித்து உங்களுக்குள் பேசி ஒரு முடிவு செய்துவிட்டு பின்னர் வாருங்களேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: LOP அவர்கள் relaxation கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள்.

(இ) சென்னை மாநகராட்சி, பெருங்குடி குப்பைக் கிடங்கில் ஏற்பட்ட தீ விபத்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பெருங்குடியை அடுத்து குப்பைமேடாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கின்ற குப்பைமேட்டில், மலைபோல் குவிந்திருக்கின்ற குப்பைகள் தீப்பிடித்து எரிந்து முழுவதுமாகச் சேதமடையாத நிலையில், தகவலறிந்த மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாநகராட்சியின்